1974 மார்ச் 16]

*விஞ. 455.—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் உள்ள பழமையான கோட்டைகளை பாதுகாக்கும் வகையில் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, நம்முடைய முன்னோர்களால் நிறுவப்பட்ட அந்தக் கோட்டைகள் எல்லாம் பெரிய விஞ்ஞான சிறப்புடையனதாகவும் சிமிண்ட் இல்லாத அந்தக் காலத்திலேயே எப்படியெல்லாம் கோட்டை கட்டியிருக்கிறார்கள் என்று ஆச்சரியப்படுகிற அளவிற்கும் நாமெல்லாம் தமிழர்கள் என்ற உணர்வினை அதிகமாகச் சொல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கின்ற அளவிற்கும் அப்படிப்பட்ட கோட்டைகளை விரிவுபடுத்தவும், சிறப்புச் செய்யவும் அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பழங்காலத் தன்மைகள் கெடாதவாறு பாதுகாக்கப்படுவதற்கும் வரலாற்றுச் சிறப்புகள் பாதுகாக்கப்படுவதற்கும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, பழங்கோட்டைகளைப் புதுப்பித்து, செப்பனிட்டு ஒழுங்குபடுத்துவதன் மூலம் மேற்கொண்டு செலவாவதை அந்த முன்னேற்றத்தின் மூலமாகப் பயன்படுத்திக் கொண்டு அதிலிருந்து வருமானம் வருகின்ற முறையில் அதைப் பயன் படுத்திக்கொள்ள ஆலோசனை இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வருமானத்திற்குரிய வகையிலே எப்படிக் கொண்டுவர முடியும் என்று சொல்ல முடியாது. சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும் அதனுடைய சிறப்புகளை மேம்படுத்தவும் முயற்சிகளை மேற்கொள்ளலாம். அந்த வகையில்தான் மதுரையில் திருமலை நாயக்கர் கோட்டையை புதுப்பித்து அங்கு கலைக்கூடங்களை வைப்பதன் மூலமாக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும் வருமானத்தை அதன் மூலம் பெருக்கவும் வழிவகை செய்யப்படுகிறது. அதைப்போன்று வேறு பல கோட்டைகள் இருந்தாலும் வருமானத்தைப் பெருக்குவதற்கு ஏற்றவையாக அவை இருக்குமா என்பதைச் சொல்ல முடியாது. சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து அவர்கள் அதைக் கண்டுகளிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை ஏற்படுத்திஞல் அதன் மூலம் பொதுவாக வருமானத்தை ஈட்டி, நாட்டு மக்களின் வருமானத்தை ஏற்படுத்துவதற்கு வழியேற்படும்.

திரு. த. சோணையா: தலைவர் அவர்களே, கமுதியிலே பழமையான கோட்டை ஒன்று இருக்கிறது. அது மருதுபாண்டியன் கோட்டை என்று சொல்கிறார்கள். கட்டபொம்மன் கோட்டையென்றும் சொல்கிறார்கள். அது பாழ்பட்டிருக்கிறது. அபூர்வமான அமைப்போடு கூடியிருக்கிற அந்த கோட்டையைப் புதுப்பித்தால் பயணிகள் வந்து பார்க்கக்கூடிய அளவிற்கும் அதைப் பாதுகாப்பதற்கும் ஏற்பாடு செய்த மாதிரி இருக்கும், ஆகவே, அதைச் செய்வதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பாஞ்சாலங்குறிச்சியிலே உள்ள கோட்டைகளை தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் கவனித்து வருகிறார்கள். கமுதியிலே இருக்கிற வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையும் அவர்களுடைய பார்வையிலே தான் இருக்கிறது. வந்தவாசி, தியாகதுர்கம், ஓமலூர், செங்கற்பட்டிலே உள்ள மதுராந்தகம், தரங்கம்பாடி, பழவேற்காட்டிலே உள்ள டச்சுக்காரர்களின் கோட்டை ஆகியவையெல்லாம் அந்தத் துறையினரால் தான் பாதுகாக்கப்பட்டுக்கொண்டு வருகின்றன.

திரு. ஜி. ராமசுவாமி: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ள வேலூர் கோட்டையை சீர்திருத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே வேலூர் கோட்டை மத்திய அரசினுடைய தொல் பொருள் ஆராய்ச்சித் துறையின் கண்காணிப்பிலே இருக்கிறது. சதுரங்கப் பட்டணம், செஞ்சி, கிருஷ்ணகிரி, ராயகோட்டை, தஞ்சை நகரிலே உள்ள கோட்டை, வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ள முப்பிடுப்பட்டி ஆகிய இடங்களிலே உள்ளவை எல்லாம் மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரால் பாதுகாக்கப்படுகின்றன.

Research on epilepsy.

*456 *Q.*—Thiru R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Health be pleased to state —

(*a*) whether any research into the incidents and cure of Epilepsy has been undertaken in the State ; and

(*b*) if so, the details thereof.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ): விவர அறிக்கை@ மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

45-ம் பக்கத்தில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.